1975 மார்ச் 25]

மணல் மேடு அங்காடி

* 456 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம், மணல்மேட்டில் ஊராட்சி மன்றத்தின் சார்பில் அங்காடி அமைக்கும் கட்டடப்பணி தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அங்காடி கட்டும் வேலையில் கீழ்த்தளம் கட்டி முடிக்கப் பெற்றுள்ளது. அங்காடியை விரைவில் கட்டி முடிக்க துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, வினா எண். 456, 457 ஆகிய இரண்டு கேள்விகளிலும் கேட்டவற்றைப் பொறுத்தவரையிலே, மணல் மேட்டில் ஊராட்சி ஒன்றியம் சார்பில் அங்காடி அமைக்கும் பணியும், அதைப் போலவே பேருந்து அமைக்கும் பணியும் இடையிலே நின்று போய் இருக்கின்றன. கேட்டால், சிமெண்ட் போதுமான அளவுக்குத் தரவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, உரிய முறையில் சிமெண்டை அளிக்க முயற்சி செய்து, விரைந்து முக்கியமான இந்தத் தேவைகளை நிறைவு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதற்கான முயற்சி செய்யப்படுகிறது. விரைவில் சிமெண்ட் கிடைக்கும்.

திரு. எஸ். வடிவேல் : பேரவைத் தலைவரவர்களே, மாயூரம் மணல் மேடு தொழிற்சாலைகள் வளர்ந்து வருகின்ற பகுதி. தொழிற் சாலைகள் உள்ளதால், அங்கே அங்காடி அமைத்தால் தொழிலாளர்களுக்கு உகந்த குறைந்த விலையில் தானியம் கிடைக்கும். ஆகவே, துரிதமாக அரசு அங்காடி அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை வருவதற்கு முன்னாலேயே, இந்தத் திட்டம் போடப் பட்டு, ரூ. 15,000 செலவில், பேஸ்மெண்ட் வரையில் வந்திருக்கிறது. மேல் வேலை விரைவில் முடிந்துவிடும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மணல்மேட்டில் நியாய விலைக் கடை வருவதைப் போல், மாண்புமிகு உறுப்பினர் வடிவேல் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அமைச்சவர்கள் எப்பொழுது வரும் என்று அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நியாய விலைக் கடையைப் பற்றி என்னிடம் கேட்டுப் பயனில்லை. மாண்புமிகு உணவு அமைச்சரிடம் கேட்க வேண்டும்.

[1975 மார்ச் 25

மணல்மேடு பேருந்து நிலையம்.

* 457 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியம், மணல்மேட்டில் பேருந்து நிலையம் புதியதாக அமைக்கப்பட்டு வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) பேருந்து நிலைய வேலை துவக்கப்பட்டு, தரை மட்டத்திலிருந்து தூண்கள் எழுப்பப்பட்டு, மேல் தளம் காங்கிரீட் போடும் நிலையில் கட்டிடம் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த மணல் மேட்டில் ஒரு நூற்பாலை இருக்கிறது. அந்த நூற்பாலைக்குச் செல்ல வேண்டுமென்றால் இந்த பஸ் ஸ்டாண்டில்தான் இறங்கவேண்டும். அங்கு, எந்த பஸ் ஸ்டாண்டும் ஒழுங்காக இல்லை. ஆகவே, அந்தப் பகுதியில் பூராவும் பஸ் நிற்கிற இடத்தில்தான் இறங்க வேண்டுமென்று இருக்கிறதே, ஆகவே, துரிதமாக வேலை செய்து, அதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். தொழிற்சாலைக்குப் பக்கத்தில் பஸ் நிற்கக்கூடிய ஸ்டாண்டுக்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இது உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட கேள்வி. பஸ் ஸ்டாண்டுக்குப் பணம் கொடுப்பது பற்றித்தான் இத்துறை ஆராயும். பஸ் எங்கெங்கே நிற்கவேண்டுமென்பதற்கான விளக்கங்கள் என்னால் சொல்ல முடியாது. ஆகவே, பஸ் ஸ்டாண்டைப் பொறுத்தவரையிலே வேலையைத் துரிதமாக முடிக்க எல்லா நடவடிக்கைகளும் எடுத்து வருகிறோம்.

ஒட்டப்பிடாரம் ஒன்றியத்திலுள்ள பனை மரங்கள்.

* 458 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியம், சில்லாங்குளம் பஞ்சாயத்திலிருந்து ஓ. சரவணபுரம் செல்லும் சாலையில் உள்ள பனைமரங்களை அகற்றக் கோரி விண்ணப்பம் ஏதேனும் அண்மையில் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?